Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 23.2.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 23.02.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, நாட்டின் வரலாற்றில் ஒரு அழியாத முத்திரையை பதித்துள்ளார் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இஸ்ரேலுடனான நீடித்த நட்பை இந்தியா ஆழமாக மதிக்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, புதுடெல்லியில் பாரத் டாக்சி ஓட்டுநர்களிடையே இன்று உரையாற்றினார்.

தூத்துக்குடி துறைமுக வளாகத்தில், வ.உ.சிதம்பரனார் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை இன்று மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் திறந்து வைத்தார்.

*குடியரசு தலைவர் -1 (09 )*

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, நாட்டின் வரலாற்றில் ஒரு அழியாத முத்திரையை பதித்துள்ளார் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சரியாரின் வாழ்க்கை மற்றும் பாரம்பரியத்தைக் கொண்டாடும் “ராஜாஜி உத்சவ்” இன்று கொண்டாடப்படுகிறது. குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியின் சிலையைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ராஜாஜி குறித்த கண்காட்சி நாளை தொடங்கி மார்ச் 1ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

மேலும்,இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு …

*குடியரசு தலைவர் - 2 வாய்ஸ்* (16)

… வாய்ஸ்…

இந்தியாவின் சிறந்த மகனான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, பன்முக படைப்பாற்றல் மற்றும் பன்முக பரிமாணங்கள் கொண்டவர் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாராட்டினார். மேலும், சட்டம், சுதந்திரப் போராட்டம், சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள், இந்திய வேதங்கள், அரசியல் நிர்வாகம் ஆகியவற்றில் பெரும் பங்காற்றியவர் அவர் என்று பெருமிதம் தெரிவித்தார். ராஜாஜியின்

வாழ்க்கை மற்றும் அனுபவங்களிலிருந்து, நாட்டு மக்கள் உத்வேகம் பெற்று தேசத்தை முன்னேற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், இந்தியாவின் காலனித்துவ செல்வாக்கிலிருந்து விலகிய இயக்கம், சட்டம், கல்வி, கலாச்சாரம் ஆகியவற்றில் மாற்றத்தைக் கொண்டுவந்து தேசிய அடையாளம் பெற்றுத் தந்தவர் ராஜாஜி என்று கூறினார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ராஜாஜியின் சிலைத் திறப்பு விழா நாட்டு மக்களுக்குப் பெருமை சேர்க்கும் தருணம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

*குடியரசு தலைவர் 3- வாய்ஸ் (05)*

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறுகையில், ராஜாஜியின் ஆழமான அறிவுத்திறன், தார்மீக துணிச்சல் மற்றும் தேசிய சேவைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவை பல தலைமுறைகளை தொடர்ந்து ஊக்குவிப்பதாக தெரிவித்தார்.

*குடியரசு தலைவர் -4 (05)*

இந்நிகழ்ச்சியில், குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், மத்திய அமைச்சர்கள், திரு.ஜே.பி. நட்டா, திரு.தர்மேந்திர பிரதான், திரு.கஜேந்திர சிங் ஷெகாவத், டாக்டர் எல்.முருகன் மற்றும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

*பிரதமர் இஸ்ரேல் -1 (12)*

நம்பிக்கை, புத்தாக்கம், அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இஸ்ரேலுடனான நீடித்த நட்பை இந்தியா ஆழமாக மதிக்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இஸ்ரேலிய பிரதமர் திரு.பெஞ்சமின் நெதன்யாகுவின் சமூக ஊடகப் பதிவிற்கு, பதிலளித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தியாவிற்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான வலுவான பிணைப்பு மற்றும் இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் மாறுபட்ட தன்மை குறித்து இஸ்ரேலுடன் ஒத்துழைக்க விரும்புவதாக தெரிவித்தார். தமது இஸ்ரேலிய

பயணத்தின் போது இரு நாடுகளுக்கிடையிலான பேச்சு வார்த்தைகளை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் இஸ்ரேல் மற்றும் இந்தியாவிற்கு இடையிலான பிணைப்பு ஒரு சக்தி வாய்ந்த கூட்டணி என்றும் புதுமை பாதுகாப்பு, தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

*பிரதமர் இஸ்ரேல் -2 (03)*

செயற்கை நுண்ணறிவு முதல் பிராந்திய ஒத்துழைப்பு வரை இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை, தொடர்ந்து பல உச்சங்களை எட்டி வருவதாகவும் திரு. நெதன்யாகு கூறியுள்ளார்.

*சர்பானந்த சோனோவால் (18 )*

கடல்சார் பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும், சுற்றுலா மற்றும் பொது பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையிலும், தேசிய அடையாளமாக தூத்துக்குடி துறைமுக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது என்று மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால்

கூறியுள்ளார். தூத்துக்குடி துறைமுக வளாகத்தில், வ.உ.சிதம்பரனார் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை இன்று அவர் திறந்து வைத்தார். இந்த அருங்காட்சியகம் "கப்பலோட்டிய தமிழன்" என்று போற்றப்படும் வ.உ.சிதம்பரனாரின் வரலாற்றையும், பாரம்பரியத்தையும் வெளிப்படுத்தும் நவீன காட்சிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட 60 டன் திறன் கொண்ட இழுவைப் படகையும், மத்திய அமைச்சர் பயன்பாட்டிற்கு தொடக்கி வைத்தார். தூத்துக்குடி துறைமுகத்தை மேம்படுத்தும் பணி, சரக்கு தளம் அமைக்கும் பணி, துறைமுக மேம்பாட்டிற்கான மெய்நிகர் மாதிரி செயலி ஆகியவற்றையும் அவர் தொடக்கி வைத்தார். மேலும், அத்துறைமுகத்தில் பாதுகாப்பு கட்டமைப்புகள், நவீன தீயணைப்பு எச்சரிக்கை கருவிகள், எரிசக்தி ஆற்றல் கட்டமைப்புத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் திரு. சர்பானந்த சோனோவால் தொடக்கி வைத்தார்.

*முகுல்ராய் (14 )*

முன்னாள் ரயில்வே அமைச்சரும், மாநிலங்களவை உறுப்பினருமான முகுல்ராய் இன்று காலமானார். அவருக்கு வயது 71. திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் நிறுவன உறுப்பினரான முகுல்ராய், காங்கிரஸ்

கட்சியிலிருந்து விலகி, 1998ஆம் ஆண்டில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகித்தவர். தொடர்ந்து 2021ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிட்ட அவர், வடக்கு கிருஷ்ணா நகர் தொகுதியில் வெற்றி பெற்றார். பின்னர் மீண்டும் திரிணாமுல் காங்கிரஸில் அவர் இணைந்தார். அவரது மறைவு குறித்து சமூக ஊடகப் பதிவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், முகுல் ராயின் அரசியல் அனுபவம் மற்றும் சமூக சேவையை தாம் நினைவுகூர்வதாக தெரிவித்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் முகுல்ராய் தமது வாழ்க்கையை பொதுச் சேவைக்காக அர்ப்பணித்தவர் என்று கூறியுள்ளார்.

*அமித்ஷா (12 )*

கூட்டுறவு பால் ஒன்றியங்களுக்கு ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையில் பால் விநியோகம் செய்யும் மகளிரின் பட்டியலை கூட்டுறவுத் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தியுள்ளார். புதுடெல்லியில் பாரத் டாக்சி ஓட்டுநர்களிடையே இன்று உரையாற்றிய அவர், ஆண்டொன்றுக்கு 1 கோடி ரூபாய்க்கும் மேல் வருமானம் ஈட்டும் கால்நடை வளர்க்கும் பெண்

விவசாயிகளின் புகைப்படங்கள் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். பாரத் டாக்சி திட்டம் ஓட்டுநர்களுக்கு ஆளுமை வழங்குவதோடு அவர்களின் பணிக்கான உரிமம் உறுதி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார். ஓட்டுநர்களின் நலனையும் பயணிகளின் பாதுகாப்பையும் ஒரு சேர உறுதி செய்யும் வகையில் பாரத் டாக்சி செயல்படுவதாக திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

*கிஷண் ரெட்டி (05 )*

சுரங்கப் பகுதிகளின் சுற்றுச்சூழலை மீட்டெடுத்து, புதிய வாழ்வாதாரம் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களையும் தொடங்குவதற்கான நடவடிக்கைகளின் அவசியம் குறித்து மத்திய சுரங்கம் மற்றும் நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி வலியுறுத்தியுள்ளார். இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு…

… வாய்ஸ் …

*கிஷண் ரெட்டி – வாய்ஸ் (13 )*

<u>கடலூரில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பில், சுரங்க மறுபயன்பாடு தேசிய பயிலரங்கை இன்று துவக்கி வைத்துப் பேசிய அவர்,</u>

இத்துறையில் முறையான திட்டமிடலின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். வேளாண் காடுகள், விவசாயம், மீன் வளர்ப்பு, சுற்றுச்சூழல் பூங்காக்கள், காற்றாலைகள், சூரிய சக்தி ஆலைகள், தரவு மையங்கள், பால் பண்ணைகள், தளவாட தொழிற்சாலைகள் போன்றவற்றில் சுரங்கப்பகுதிகள் அமைப்பது குறித்து ஆலோசிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். சரியான நேரத்தில் சுரங்கங்கள் குறித்து உயரிய பயிலரங்கு நடத்தப்படுவதையும், அவர் விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் நாட்டில் தற்போதுள்ள நிலக்கரி சுரங்கங்களில் 478 செயல்பாட்டிலுள்ளதாகவும், 147 சுரங்கங்கள் மூடப்பட்டிருப்பதாகவும், மூடப்பட்ட இந்த சுரங்கங்களின் மறுபயன்பாட்டை சீராக்குவதே இந்த பயிலரங்கின் நோக்கம் என்றும் கூறினார்.

*ராணுவ கூட்டுப் பயிற்சி (09)*

இந்தியா-ஜப்பான் நாடுகளுக்கிடையேயான ராணுவக் கூட்டுப் பயிற்சி உத்தரகாண்ட் மாநிலம் Chaubattia-வில் நாளை தொடங்கி, அடுத்த மாதம் 9ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த ராணுவக் கூட்டுப் பயிற்சிக்கு Dharma Guardian என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இந்திய ராணுவம் சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளது. தீவிரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்படும் குறித்து இந்த ராணுவப் பயிற்சி

மேற்கொள்ளப்படும் என்றும், இருநாடுகளுக்கிடையேயான ராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க இந்த கூட்டுப்பயிற்சி வழிவகை செய்யும் என்றும் இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி பிரதமர் (13 )*

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 1ஆம் தேதி புதுச்சேரிக்கு வரவுள்ளதை முன்னிட்டு, BJP மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு BJP-யின் மாநில தலைவர் திரு. ராமலிங்கம் தலைமை தாங்கினார். BJP மேலிடப் பொறுப்பாளர் திரு. நிர்மல் குமார் சுரானா, பிரதமர் வருகையை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு.நரேந்திர மோடி பல்வேறு நலத்திட்டங்களை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சட்டப்பேரவை தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள் திரு. நமசிவாயம், திரு.ஜான்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கல்யாணசுந்தரம், திரு.சாய் ஜெ. சரவணன் குமார், திரு. தீய்ப்பாய்ந்தான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி வைத்திலிங்கம் -1 (13 )*

புதுச்சேரி, காவல்துறையில் உதவி ஆய்வாளர் பணிக்கான உடல் தகுதி தேர்வு நடைபெற்றதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு.வைத்திலிங்கம் கூறியுள்ளார். இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர், காவல்துறையின் உதவி ஆய்வாளர் பணிக்கான உடல் தகுதி தேர்வை தடை செய்யப்பட்ட நிறுவனம் மூலம் நடத்தப்பட்டது கண்டிக்கத்தக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்

மேலும், முன்னாள் முதலமைச்சர் திரு.நாராயணசாமி கூறுகையில், black list செய்யப்பட்ட நிறுவனம் 5 ஆண்டுகளுக்குச் செயல்பட முடியாது என்றும், அவர்களைக் கொண்டு நடத்தப்பட்ட இந்த காவல் உதவி ஆய்வாளர் தேர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

*தமிழக மீனவர்கள் (05 )*

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார். இது குறித்து, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர்

டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், தடுப்பு காவலில் வைக்கப்படுவதும் கவலையளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையே எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, தனுஷ்கோடி அருகே தலைமன்னாரில் மீன் பிடித்துக்கொண்டிருந்த பாம்பன் பகுதியைச் சேர்ந்த 12 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளனர்.

*கிரிக்கெட் (05 )*

இந்தியா-ஆஸ்திரேலியா மகளிர் அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நாளை தொடங்குகிறது. இரண்டாவது போட்டி வரும் வெள்ளிக்கிழமையும், மூன்றாவது மற்றும் இறுதிப் போட்டி வரும் 1ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, நாட்டின் வரலாற்றில் ஒரு அழியாத முத்திரையை பதித்துள்ளார் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இஸ்ரேலுடனான நீடித்த நட்பை இந்தியா ஆழமாக மதிக்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, புதுடெல்லியில் பாரத் டாக்சி ஓட்டுநர்களிடையே இன்று உரையாற்றினார்.

தூத்துக்குடி துறைமுக வளாகத்தில், வ.உ.சிதம்பரனார் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை இன்று மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் திறந்து வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது AV/KR/VM